**செ. கு. எண்:167** **நாள்: 28.10.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

அறிக்கை - 28.10.2017

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள **கடனா, அடவிநயினார்கோவில், இராமநதி மற்றும் கருப்பாநதி நீர்த்தேக்கங்களிலிருந்து** பிசான பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடுமாறு விவசாய பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன.

விவசாயப் பெருமக்களின் கோரிக்கையினை ஏற்று, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கடனா, அடவிநயினார்கோவில், இராமநதி மற்றும் கருப்பாநதி நீர்த்தேக்கங்களிலிருந்து பிசான பருவ சாகுபடிக்கு **1.11.2017 முதல் 30.3.2018** வரை தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது. இதனால், திருநெல்வேலி மாவட்டம், தென்காசி, செங்கோட்டை, கடையநல்லூர், அம்பாசமுத்திரம் மற்றும் சேரன் மகாதேவி வட்டங்களிலுள்ள **32,025 ஏக்கர்** நேரடி மற்றும் மறைமுகப் பாசனப் பரப்புகள் பயன்பெறும்.

மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**